# ரகசிய ஸ்னேகிதன்

அவமானம் என்னைத் தின்றது. " ரிச்சி முகத்தில எப்படி முழிக்கப்போறேனோ...? ஃப்ரண்ட்ஷிப்ங்கறவார்த்தையையே அசிங்கப்படுத்திட்டேன் நான் ...'' என் வார்த்தைகளில்லாப் புலம்பல்களை முகத்தைப் பார்த்து யாரும் புரிந்துகொள்வது போல இல்லை . வழக்கம்போல எல்லோரும் புன்முறுவிச் சென்றார்கள்.

அஷோக் மட்டும் தான் கேட்டான், ''ஏண்டா ஒரு மாதிரி இருக்கற நீ?''

முழுக்கதையையும் சொல்லவ ா, வேண்டாமா என்று எனக்குள்ளேயே குழம்பி, அவசரத்தீர்மானம் நிறைவேற்றி பாதிக்கதையை மட்டும் 'சென்சார்' பண்ணிப் புலம்பினேன்.

''டேய் நீ நல்ல நோக்கத்துல தான இப்படி செஞ்சே . சும்மா மனசக் குழப்பிக்காதே . நீ எப்பவுமே இப்படித்தான்... சின்ன விஷயத்தப் பெரிசாக்கிட்டு ஒப்பாரி வச்சிட்டு இருப் ப. வேணாப்பாரேன் இன்னிக்கோ நாளைக்கோ வாயெல்லாம் பல்லா காலெல்லாம் துள்ளலா வருவே அப்போ பேசிக்கிறேன்.''

***

ரிச்சர்டும் நானும் இந்த வருஷம் தான் கொஞ்சம் நெருக்கமானோ ம். போன வருஷம் நடந்த யுனிவர்சிட்டி யூத் ஃபெஸ்டிவல் எங்கள் இருவருக்குமே ஒரு திருப்புமுனை மாதிரி . நாங்கள் இருவருமே நல்ல நட்பு கிடைத்த மகிழ்ச்சியில் தலைகால் தெரியாமல் குதித்துக் கொண்டிருந்தோம். நான் அவனை ரிச்சி என்று இளித்துக் கொண்டே அழைக்க அவன் வாய் நிறைய என்னை மச்சி என்பான். யார் கண் பட்டதே ா? இல்லை.... என் வாய் தான் சுட்டது .... பெயருக்கேற்ப திறமைகள் அவனிடம் குவிந்திருந்த ன. பார்ப்பவர் யாரும் பழகத்துடிக்கும் வசீகரம், பாடுவதில், ஆங்கிம் தமிழ் இரண்டிலும் எனக்குத் தெரிந்து சம அளவு திறமையுள்ள சிலரில் இவனும் ஒருவன்.

"ரெம்ப காலத்துக்குப் பிறகு ஒரு நல்ல சிங்கருக்கு வாசித்த திருப்தி இருக்கு . கர்னாட்டிக்குலயும் வெஸ்டர்ன்லயும் தம்பி கலக்குறாரு" உள்ளூர் தொழில்முறை இசைக்கலைஞர் ஒருவர் ஆல் இந்தியா ரேடியோ நிகழ்ச்சியை முடித்து வரும்போது வாயார வாழ்த்தினா ர். அடக்கமான புன்னகையுடன் ஏற்றுக் கொண்ட அவன் ஆள்த்தன்மையையும் பார்த்து நான் பொறாமை கலந்த பெருமை கொண்டேன். காலேஜ் இசைக்குழுவுடன் ரிச்சி அதிக நேரம் செலவிடுவதுவு ம், கிட்டாரிஸ்ட் அருணுடன் அவன் சுற்றுவதும் எங்கள் இருவருக்குமிடையே.... சிறிது.... எனக்குள் பொறாமைய ா? அல்லது தனிமை உணர்வா?

***

ரிச்சர்ட் வழக்கத்திற்கு மாறாகத் தளர்வாக நடந்து வந்து கொண்டிருந்தான். நான் என் மனசாட்சிக்கு எதிராக அவனைத் தவிர்த்து இடப்புறமாக கெமிஸ்ட்ரி லேப் வழியாகத் தடம் புரண்டேன் .''எனக்கு என்ன ஆச்சு . கொஞ்ச நாளாவே வினோதம ா, தீஞ்ச புத்தியில என்னவெல்லாமோ செஞ்சிட்டு இருக்கேன்? தைரியமா எல்லார்ட்டயும் நேரடியாப் பேசறவ ன்... என் க்ளோஸ் ஃப்ரண்டப் பார்க்க வெட்கப்பட்டு இப்படிப் பரிதாபமா ஓடிட்டு இருக்கேனே. எப்படிப்பட்ட பெரிய விஷயங்கள எல்லாம் சாதாரணமா பேசித் தீர்த்திருக்கோம்....''

***

ஆடிட்டோரியம் அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது.
காலேஜ் ம்யுசிக் டீம்.... ப்ராக்டிஸ்....ஸ்டேட் லெவல் போட்டிக்காக ஒத்திகை நடக்கிறது.
'ஐயோ ரிச்சி இல்லாம ப்ராக்டிஸ் நடக்குதே.... எல்லாத்துக்கும் நான் தான் காரணம்.' காரிடார் வழியே

நடந்து போய்க் கொண்டிருந்த என்னை அடையாளம் கண்டு கொண்ட ப்ரேம் மைக்கைப் பிடித்து சமீபத்தில் பிரபலமான ஒரு பாடலில் ராகத்தில் பாட ஆரம்பித்தான், “போட்டுக் குடுத்தவனே கேட்டுக்கோ போட்டுக் குடுத்தவனே மாட்டிக்கோ.” எல்லோரும் என்னையே பார்ப்பது போல இருந்தது. ஆனால் அங்கே இருந்ததே எட்டுப் பேர்தான். ஏழு பேர் தங்களுக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருந்தனர். டேவிஸ் சார் என்னைப் பார்த்து நிற்கும்படி சைகை செய்து கொண்டே வந்து கொண்டிருந்தார். நான் வேகமாக அவரைப் பார்க்காதது போல விலகிப் போய்விட்டேன்.

***

போன வாரம் காலேஜ் ம்யுசிக் டீம் மதுரைக்கு ஒரு கல்ச்சுரல்ஸ் போட்டிக்குப் போனபோது ரிச்சி தான் முக்கியப் பாடகன். போட்டிகள் முடிந்ததும் மற்ற காலேஜ் மாணவ மாணவிகளோடு அறிமுகம், தண்ணி பார்ட்டி எல்லாம் தடபுடலாக தயாராகும் செய்தியை 'ரிச்சி' மூலமாகத் தெரிந்ததும் நான் அலர்ட் ஆனேன். அந்த ரியல் எஸ்டேட்காரரர் பையன் ஏற்கனவே பல கேஸ்களில் மாட்டித் தப்பியவன். வெளியூரில் என்னவெல்லாம் அட்டகாசம் செய்வார்களோ. அதுவும் பெண்களைக் கண்டால் எதுவும் செய்கிற கூட்டம் அது. ரிச்சி ஒரு சாது. இவர்கள் கையில் மாட்டி... ஏடாகூடமா எதுவும் ஆகிவிட்டால்? என் அட்வைஸை அவன் எப்படி எடுத்துக் கொள்வானோ.... இங்கே தான் நான் தப்புச் செய்துவிட்டேன். நேரடியாக அவனிடம் பேசியிருக்க வேண்டும். நான் லூசுத்தனமாக டீமை அழைத்துச் செல்லும் டேவிஸ் சாரிடம் போய் எச்சரிக்கை செய்து விட்டேன்...

***

டேவிஸ் சார் வேகமாக வந்து என்னை எட்டிப்பிடித்துவிட்டார் “சாரிடா, நான் கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருந்திருக்கணும். பசங்க நீதான் எங்கிட்ட சொன்னேன்னு கண்டுபிடிச்சிட்டாங்க. விஷயம் லீக் ஆனதுல அவங்களுக்கு பயங்கர கோபம். ரிச்சி அவன் தான் உங்கிட்ட சொன்னதா ஒத்துக் கிட்டான். ப்ரேம் என் சட்டையப் பிடிக்கற மாதிரி வந்துட்டான். நானும் உண்மையச் சொல்ல வேண்டியதாப் போச்சு.”

“சார் உங்ககிட்ட நான் என்ன சொன்னேன். உங்களுக்குத் தெரிஞ்சமாதிரி காட்டிக்காம, ரிச்சிய மட்டும் காம்படிஷன் முடிஞ்சதும் ஏதாவது ரீசன் சொல்லி திருப்பி அனுப்பிடுங்கன்னு சொன்னேன். இப்படி சொதப்பிட்டீங்களே.” என் தொண்டை அடைத்துக் கொண்டது.

'போட்டுக் குடுத்தவனே' பாடல் இப்போது புது பீட்டுக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. 'டேவிஸ் சாரச் சொல்லி என்ன புண்ணியம். சொதப்பல் ஆரம்பிச்சது என்னால ... எம்புத்திய செருப்பால அடிக்கணும்' தானாகவே புலம்பிக்கொண்டு....

***

இனி ரிச்சிக்கு ம்யுசிக் டீமில் இடம் இல்லையாம். டேவிஸ் சார் ரிச்சிக்கு சப்போர்ட் பண்ணப்போக டீம் கூண்டோடு ராஜினாமா பண்ணுவதாக மிரட்ட, ரிச்சி விலகிக்கொண்டானாம். மதுரையில் தங்கப்பதக்கம் வாங்கின கையோடு டேவிஸ் சாரை பாய்க்காட் பண்ண டீம் முயற்சிக்க அவரும் எதிர்த்துப் பேச விவாதம் முற்றியது. சார் ஆதாரங்களோடு என்னையும் மாட்டிவிட்டுவிட்டார். ட்ரம்மர் வினோத்தின் நண்பன் அஜித் எனக்கு ந்யூஸ் அப்டேட் செய்திருந்தான்.

நான் பண்ணுன தப்புக்கு ரிச்சி அனுபவிக்கிறான். பாவம் நல்ல பாடகன். அனுபவிச்சுப் பாடுவான். பாட்டுன்னா அவனுக்கு உயிர். ஸ்டேட் லெவலுக்கு போனா அப்புறம் நேஷனல் லெவல்... எதிர்காலக் கனவுகளையெல்லாம் என்னிடம் சொல்லியிருக்கிறான். எல்லாம் திடீரென ஒன்றுமில்லாமல் போனதாக... என் மேல் எனக்குக் கோபம் வர டூ வீலர் ஷெட்டின் தூணை பலமாக உதைத்தேன்.

தூரத்தில் ரிச்சி... பைக் மேல் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தான்.

“டேய் ரிச்சி என் மேல கோபமாடா?” கேட்பதே முட்டாள் தனம் என்று தெரிந்தது. பேசவேண்டுமே என்று பேசினேன்.

“இல்ல" மூக்கை உரிஞ்சிக்கொண்டே அவன் பதில் சொன்னான்.

“சாரிடா"

“இட்ஸ் ஓ.கே.”

“என்ன சொல்றதுன்னே எனக்குத் தெரியல. சாரிடா. நல்ல மோட்டிவ்ல தான் சொன்னேன். அவுங்க கிட்ட இருந்து உன்னக் காப்பாத்தணும்னு தான்.... டேவிஸ் சார்ட்ட சொல்லி உன்ன சீக்கிரமாவே அனுப்ப வைக்கலாம்னு....”

“ நீ என்கிட்ட சொல்லியிருக்கலாம்.” அந்த 'நீ'யில் ஒரு அழுத்தம் இருந்தது போல எனக்குத் தெரிந்தது. குற்ற உணர்ச்சி என்னை அதிகம் அழுத்த, “நான் அப்புறமா உன்ன வந்து பாக்குறேன்.” என்றபடியே பதிலுக்கு பயப்பட்டு வேகமாக நகர்ந்தேன்.

***

ஒரு முழு நாள் எந்த நிகழ்வும் இல்லாமல் நகர்ந்தது. நான் தான் ஒரு எஸ்.எம்.எஸ் அனுப்பினேன். 'என்னை நானே மன்னிக்கவில்லை. நீ....?' பதில் வந்தது... மன்னிப்பின் மதிப்பை மன்னிக்கப்பட்டால் தான் புரியமுடியும் போல....இது வரை சிலரை மன்னித்திருக்கிறேன்... என் நினைவு தெரிந்து இன்று தான் நான் மன்னிக்கப்பட்டிருக்கிறேன்... எழுத்துக்கள் மங்கலாகத் தெரிந்தன, கண்களைத் துடைத்துக் கொண்டு வாசித்தேன், ' உன் இடத்துல யார் இருந்தாலும் அதத் தான் செய்திருப்பாங்க. எம் மேல உன் அக்கரையத் தான இது காட்டுது.' உடனே call என்ற பொத்தானை அழுத்தினேன்.

“ சாரிடா, ம்யூசிக் டீமோட உன் உறவு, உன் திறமையை வெளிப்படுத்துற வாய்ப்பு எல்லா என்னால போச்சு....”

என்னைப் பேசவிடாமல் அவன் ஆக்ரமித்தான், “இன்னிக்கி ஜூபிலி ஹால்ல நான் பாடறேன். ஆல் இந்தியா ரேடியோவுல பாத்தோமே விஸ்வநாதன் அவரோட ப்ரோக்ராம். ஆறு மணிக்கு . நான் ப்ராக்டிஸ்க்கு போய்ட்டிருக்கேன். ப்ரோக்ராம் முடிஞ்சதும் சாப்பிடப் போகலாம் சரியா.”

***

ஜூபிலி ஹால்....
பரவாயில்லாத கூட்டம்...
என்னவோ எனக்கும் ரிச்சிக்குமே நடந்த நிகழ்ச்சி மாதிரி இருந்தது.
நான் ரசிக்கிறேன். இதுவரை இல்லாத வகையில் அவன் எனக்காகவே பாடுவது போல இருந்தது.

'முஸ்தஃபா, முஸ்தஃபா டோண்ட் ஒர்ரி முஸ்தஃபா நான் உந்தன் தோழன் முஸ்தஃபா.' கொஞ்சம் பழைய பாடலாக இருந்தாலும் விஸ்வநாதன் தன் கிட்டார் திறமையைக் காட்டவும் ரிச்சிக்குத் தீனி போடவும் அந்தப் பாட்டைத் தேர்ந்தெடுத்தது போல இருந்தது. எங்களுக்கோ, மூழ்காத ஷிப்பில் ஒரு ட்ரிப் அடிப்பதற்காக இசைக்கப்பட்டது போல இருந்தது.